# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13(2018) | கணக்கீடு - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :-**

சுட்டெண் :- ............................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| பகுதி - I இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) கணக்கீட்டின் உள்ளீடு, வெளியீடாக அமைவது.
(1) வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று
(2) கொடுக்கல் வாங்கல்கள், நிதிக்கூற்றுக்கள்
(3) கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள்
(4) கொடுக்கல் வாங்கல்கள், நிலைமாற்றங்கள்
(5) எண்ணக்கருக்கள், கணக்கீட்டு நியமங்கள் (......)

02) 2010 ஆம் ஆண்டில் ரூ 3,500,000க்கு வாங்கப்பட்ட காணியொன்று 2017.03.31 ஆம் திகதிய நிதிநிலைமைக்கூற்றில் ரூபா 5,000,000 மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ***பின்பற்றப்படாத*** கணக்கீட்டு எண்ணக்கருவும், மீள்மதிப்பீட்டுப் பெறுமதியை பதிவு செய்வதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற தரரீதியான பண்பும் எவை?

| | ***எண்ணக்கரு*** | ***தரரீதியான பண்புகள்*** |
|---|---|---|
| (1) | வணிக அலகுசார் | பொருத்தப்பாடு |
| (2) | பொருந்தச்செய்தல் | நம்பகரமான பிரதிநிதித்துவம் |
| (3) | வரலாற்றுக்கிரயம் | விளங்கக்கூடியதன்மை |
| (4) | வரலாற்றுக்கிரயம் | ஒப்பிடக்கூடியதன்மை |
| (5) | வரலாற்றுக்கிரயம் | பொருத்தப்பாடு |

(......)

03) வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றின் காரணமாக ஏற்பட்ட தாக்கமானது கணக்கீட்டு சமன்பாட்டின் ஊடாக பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

***சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமை***

***- 55000 = - 60000 + 5000***

இதன் மூலம் வெளிக்காட்டப்படும் கொடுக்கல் வாங்கலாக இருப்பது,
(1) ரூ 55000 கிரயமான பொருட்கள் ரூ 60,000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
(2) ரூ 5000 வட்டியுடன் வங்கிக்கடன் ரூ 60,000 செலுத்தப்பட்டுள்ளது.
(3) சென்மதியாளருக்குச் செலுத்த வேண்டிய ரூ 60,000த்தை முழுமையாக கொடுத்துத் தீர்ப்பதற்காக ரூ 55000 செலுத்தப்பட்டுள்ளது.
(4) ரூ 60000 பெறுமதியான பொருட்கள் 10% பெறுமதி சேர்க்கப்பட்ட வரியுடன் (VAT) கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
(5) ரூ 55000 கிரயம் கொண்ட வாகனம் ரூ 60000த்திற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
(......)

04) வரையறுத்த சமிந்த பொதுக்கம்பனி குறித்த கணக்காண்டில் ஏனைய முற்றும் அடங்கிய வருமானத்தின் கீழ் காணி மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 150.000ஐ காட்டியிருந்தது. இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு.

(1) தேறல் (2) இணைத்தல் (3) வெளிப்படுத்தல்
(4) அட்டுறு (5) பாதுகாப்பு (……)

05) பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எவை?

A - கடந்தகால கொடுக்கல் வாங்கல் / நிகழ்வு ஒன்றின் விளைவாக எதிர்காலத்தில் வணிகத்துக்கு பொருளாதார நலன்களில் உட்பாய்ச்சலை ஏற்படுத்துவதும், வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியதுமான வளங்கள் சொத்துக்கள் ஆகும்.

B - கடந்தகால கொடுக்கல்வாங்கல் / நிகழ்வொன்றின் பெறுபேறாக வணிகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் பொறுப்புக்கள் ஆகும்.

C - வணிகத்தின் உரிமையாளர் சார்பாக காணப்படும் சொத்துக்களின் அளவு உரிமை ஆகும்.

D - உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் காரணமாக உரிமையில் நிகழும் அதிகரிப்பு தவிர்ந்த உரிமையில் இடம்பெறும் ஏனைய அதிகரிப்புக்கள் வருமானங்கள் ஆகும்.

E - பற்றுதல் காரணமாக நிகழும் உரிமையின் குறைவு தவிர்ந்த உரிமையில் இடம்பெறும் ஏனைய குறைவுகள் செலவீனங்கள் ஆகும்.

(1) A மட்டும் (2) A,B மட்டும் (3) A,B,C மட்டும்
(4) A,B,C,D மட்டும் (5) A,B,C,D,E எல்லாம் (……)

06) ஆண்டுக்காலத்தில் கடன்படுநரிடம் இருந்து 5% காசுக்கழிவு நீக்கி ரூ114000 பெறப்பட்டது. ஆண்டுக்கான கடன் விற்பனையில் 20% வியாபாரகழிவாக அனுமதிக்கப்பட்டதுடன், ஆண்டுக் காலத்தில் கடன்படுநர் மீதி ரூ20000 தொகையால் அதிகரிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட வியாபாரக் கழிவுத்தொகை யாது?

(1) 35000 (2) 28000 (3) 24000
(4) 12000 (5) 18000 (……)

07) காஞ்சனா வாணிபத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு.

| விபரம் | 31.03.2017 | 31.03.2016 |
|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | 184.000 | 120.000 |
| மொத்த பொறுப்புக்கள் | 80000 | 48000 |

ஆண்டு காலத்தில் வங்கிக்கடன் தவணைப்பணம் ரூ 2000 வட்டி உட்பட ரூ 10000 உரிமையாளர் தனது சொந்த நிதியில் இருந்து செலுத்தி இருந்தார். உரிமையாளரின் வதிவிட வீட்டு வாடகை ரூ 12,000 நிறுவனத்தின் காசில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. 31.03.2016 இல் 31.03.2016 இல் சொத்துக்களில் உள்ளடக்கப்படாத கடன் கொடுத்தோருக்கு திருப்பி அனுப்பிய இருப்புக்கள் ரூ 3000 கணக்கேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம்.

(1) ரூ 34000 (2) ரூ 32000 (3) ரூ 31000
(4) ரூ 29000 (5) ரூ 37000 (……)

08) நிதிக்கூற்றொன்றாக கருதக்கூடிய உருப்படியாக அமைவது.

(1) காசுப்பெறுவனவு நாளேடு (2) பரீட்சைமீதி (3) சில்லறைக்காசு கொடுப்பனவுஏடு
(4) வருமானக்கூற்று (5) பொது நாட்குறிப்பேடு (……)

09) கிருபா வாணிபத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு அமைய மூலஆவணங்கள் பின்வரும் ஒழுங்கில் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

A – பட்டியல் B – பற்றுச்சீட்டு C – வைப்புத்துண்டு

D – செலவுத்தாள் E – வங்கிக்கூற்று

ABCDE ஒழுங்காக குறித்து நிற்பது எதனை?

(1) விற்பனை, வைப்பில்இடல், உட்திரும்பல், காசோலை பெறல், மறுப்புச்செலவுடன் மறுக்கப்படல்.

(2) கடன்விற்பனை, உட்திரும்பல், காசோலைபெறல், மறுப்புச்செலவுடன் மறுக்கப்படல், வைப்பில் இடல்.

(3) கடன்விற்பனை, காசோலைபெறல், வைப்புச்செய்தல், உட்திரும்பல், மறுப்புச்செலவுடன் மறுக்கப்படல்.

(4) கடன்விற்பனை, வைப்புச்செய்தல் உட்திரும்பல், மறுப்புச்செலவுடன் மறுக்கப்படல், காசோலை பெறுதல்.

(5) விற்பனை, காசோலைபெறல், வைப்புச்செய்தல், உட்திரும்பல், மறுப்புச்செலவுடன் மறுக்கப்படல். (……)

10) வியாபாரம் ஒன்றின் புத்தகங்களில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | **31.03.2017** | **31.03.2016** |
|---|---|---|
| **வியாபாரகடன்படுநர்** | **1400 000** | **1200 000** |
| **ஐயக்கடன் ஏற்பாடு** | **140 000** | **120 000** |

மேலும் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் அறவிடமுடியாக் கடனாக ரூபா 60000 பதிவளிக்கப்பட்டுள்ளதுடன் அவை அறவிடமுடியாக் கடன்கள் கணக்கில் பதியப்பட்டுள்ளன. பின்வருவனவற்றுள் சரியானது எது?

| **31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் செலவு (ரூ 000ல்)** | **31.03.2017 இல் வியாபார வருமதிகளின் கொண்டு செல் மீதி (ரூ 000ல்)** |
|---|---|
| (1) 60 | 1260 |
| (2) 80 | 1220 |
| (3) 80 | 1260 |
| (4) 180 | 1220 |
| (5) 180 | 1380 |

(……)

The National E-Learning Portal for The General Education

11) 31.03.2017 இல் நிறுவனமொன்றில் இருப்பு உருப்படிகள் தொடர்பான தகவல்கள் வருமாறு.

| **உருப்படிகள்** | **பயன்படுத்திய மூலப்பொருள்(ரூ)** | **மாற்றல் கிரயம்(ரூ)** | **எதிர்பாக்கும் விற்பனை விலை(ரூ)** | **எதிர்பார்க்கும் விற்பனைசெலவு (ரூ)** |
|---|---|---|---|---|
| A - | 2000 | 800 | 3000 | 500 |
| B - | 2400 | 700 | 4000 | 600 |
| C - | 3000 | 600 | 4200 | 700 |
| D - | 2100 | 900 | 3200 | 400 |

31.03.2017 இல் உருப்படி ரீதியாக இருப்பின் பெறுமதி யாது?

(1) ரூ 12500 (2) ரூ 11900 (3) ரூ 12200

(4) ரூ 12800 (5) ரூ 13000 (……)

12) 31.03.2017 இல் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு ரூபா 72000இனையும், கடன்கொடுத்தோர் பட்டியல் மீதி ரூபா 65000 இனையும் மீதியாக காட்டியது. பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

A - மார்ச் மாத கொள்வனவு நாளேடு ரூபா 8400 இனால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.

B - ரூ 6400 பெறுமதியான கடன்கொள்வனவு ஒன்று துணைப்பேரேட்டில் ரூபா 4600 என பதியப்பட்டிருந்தது.

C - கடன்கொடுத்தோர் கணக்கொன்றின் இறுதிநிலுவை ரூபா 3200 கடன்கொடுநர் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

D - ரூபா 7300 பெறுமதியான வரவுத்தாள் ஒன்றிக்கு அதன் மூலப்பதிவேட்டில் ரூ 3700 எனப்பதியப்பட்டுள்ளது.

31.03.2017இல் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பாதிப்பினை ஏற்படுத்தும் வழுக்கள்?

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) A யும் D யும்

(4) B யும் C யும் (5) B யும் D யும் (……)

13) 31.12.2016 இல் இந்திரா கம்பனியின் பரீட்சை மீதி இணங்கவில்லை. பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டுள்ளது.

* விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூ 12,000 தொடர்புடைய கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ 21000 எனப்பதியப்பட்டுள்ளது.
* வாடகை செலுத்தியது ரூ 6200 தொடர்புடைய பேரேட்டுக்கணக்கில் ரூ 2600 எனப்பதியப்பட்டுள்ளது.
* மே மாதக் கொள்வனவு நாட்குறிப்பேடு ரூ 5000 இனால் கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.
* காப்புறுதிக் கணக்கு மீதி ரூபா 8400 பரீட்சை மீதியில் தாக்கல் செய்யப்படவில்லை.

மேற்தரப்பட்ட வழுக்களினால் பரீட்சை மீதியில் ஏற்பட்ட தேறிய தாக்கம் யாது?

(1) வரவு நிரல் ரூபா 3000 ஆல் குறையும்
(2) செலவு நிரல் ரூபா 3000 ஆல் குறையும்
(3) வரவு நிரல் ரூபா 2000 ஆல் குறையும்
(4) செலவு நிரல் ரூபா 2000 ஆல் குறையும்
(5) வரவு நிரல் ரூபா 12000 ஆல் குறையும். (……)

14) 31.12.2016 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தளபாட உற்பத்தி நிறுவனமொன்றின் ஏடுகளில் பெறப்பட்ட தகல்கல்கள் வருமாறு,

பலகை கொள்வனவு - 1100
தச்சுத்தொழிலாளர் கூலி - 600
உற்பத்தி மேந்தலைகள் - 700
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு – 100
நடைமுறை வேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு – 200
முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு – 300

உற்பத்திக் கிரயம், விற்பனைக்கிரயம் ஆகியன முறையே,

(1) ரூபா 2300, ரூபா 2600 (2) ரூபா 2500, ரூபா 2200 (3) ரூபா 2600, ரூபா 2900
(4) ரூபா 2300, ரூபா 2200 (5) ரூபா 2500, ரூபா 2800 (……)

15) பங்காளர் ஒருவர் பங்குடமைக்கு வழங்கும் கடன்தொடர்பில் தவறான கூற்றாக அமைவது?

A - இலாபநட்ட பகிர்வில் கடன்வட்டி தாக்கம் செலுத்தும்
B - கடன்தொகை உரிமை நிதியில் உள்ளடக்கப்படுகிறது.
C - 42வது பிரிவுக்கு அமைய இக்கடன் தொகைக்கு 5%. கடன்வட்டி தீர்மானிக்கப்படும்.

(1) B (2) C (3) BC (4) AC (5) ABC எல்லாம் (……)

16) சேரன் வணிகத்தின் பின்வரும் தகவல் உமக்கு தரப்படுகின்றது.

| | **2017.03.31** | **2016.03.31** |
|---|---|---|
| **சரக்குஇருப்பு** | **300.000** | **200 000** |
| **கடன்படுநர்** | **180.000** | **140 000** |

2017.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் கடன்பட்டோர்களிடம் இருந்து ரூபா 920,000 கிடைக்கப்பெற்றதுடன், காசுக்கு விற்பனை ரூ790,000ஆக இருந்தது. வணிகமானது கிரயத்தில் 41% இலாபம் வைத்து பண்டங்களை விற்பனை செய்கின்றது. 2017.03.31இல் முடிவடைந்த வருடத்தில் இடம்பெற்ற கொள்வனவின் பெறுமானம்?

(1) 1134 000 (2) 1150 000 (3) 1350 000
(4) 1550 000 (5) 1564 000 (……)

17) பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றுக்குச் சொந்தமான இயந்திரம் ஒன்றுடன் தொடர்புடையது.

| | |
|---|---|
| கிரயம் (ரூ 000ல்) | 6000 |
| 31.03.2016 இல் திரண்ட பெறுமான தேய்வு (000ல்) | 2400 |
| எதிர்பார்க்கப்படும் எஞ்சிய பெறுமதி (000ல்) | 400 |
| எதிர்பார்க்கப்படும் பயன்தருகாலம் (வருடக்காலம்) | 14 |

இயந்திரத்தின் இயலளவை பாரிய அளவில் மேம்படுத்துவதற்கு கம்பனியானது 01.04.2016ல் 18,00,000 செலவு செய்துள்ளது. இதன் காரணமாக எஞ்சியுள்ள பயன்தரு காலமானது 10 வருடத்துக்கு அறிவித்துள்ளது. எனினும் எஞ்சிய பெறுமதி மாறாது காணப்பட்டது.

31.03.2017ல் முடிவடைந்த வருடத்துக்கான இயந்திரத்தின் பெறுமானத்தேய்வு மற்றும் 31.03.2017ல் உள்ளவாறான கொண்டுசெல் மீதி என்பன யாவை?

| | பெறுமான தேய்வு (000ல்) | கொண்டுசெல்மீதி (000ல்) |
|---|---|---|
| (1) | 100 | 4500 |
| (2) | 100 | 4900 |
| (3) | 320 | 3280 |
| (4) | 500 | 4500 |
| (5) | 500 | 4900 |

(……)

18) ஐயக்கடன் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு பின்வருவனவற்றுள் எவ்விளைவுகளை ஏற்படுத்தும்?
(1) சொத்துக்களில் குறைவினை ஏற்படுத்தும்
(2) பொறுப்பில் குறைவினை ஏற்படுத்தும்
(3) தேறிய இலாபத்தில் குறைவினை ஏற்படுத்தும்
(4) தொழில்படு மூலதனத்தில் குறைவினை ஏற்படுத்தும்
(5) தொழில்படு மூலதனத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும். (……)

19) இருப்பின் கிரயத்தின் கூறுகளாகக் கருதப்படுவது எவை?
A - மூலப்பொருள் செலவு
B - ஏற்றி இறக்கும் கட்டணம்
C - களஞ்சியப்படுத்தல் செலவு
D - உற்பத்திக் கூலி
E - வெளிக்காவுகை
(1) Aயும் Bயும் Dயும் (2) Aயும் Bயும் Cயும் (3) Aயும் Bயும் Eயும்
(4) Aயும் Bயும் Cயும் Dயும் (5) Bயும் Cயும் Dயும் (……)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 20, 21, 22 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

2017.03.31ல் முடிவடைந்த வருடத்திற்கான சேரன், சோழன், பாண்டியன் பங்குடமை வணிகத்தின் தகவல்களில் சில வருமாறு.
A - சோழனின் பங்குடமைச் சம்பளம் வருடாந்தம் ரூபா 24000.
B - மேற்குறிப்பிட்ட சம்பளத்தில் ரூபா 12000 குறித்த வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
C - சேரன், சோழன், பாண்டியன் என்பவர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட இறுதிப்பங்கு இலாபம் முறையே ரூபா 40,000 ரூபா 30,000 ரூபா 20.000 ஆகும்.
D - பாண்டியனுக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி ரூபா 3000திற்கு எவ்வித பதிவுகளும் செய்யப்படவில்லை.
E - சேரன், பாண்டியன் என்போர்களின் பற்று முறையே ரூபா 3000 ரூபா 2000 ஆக இருந்ததுடன் இது தொடர்பில் எவ்வித பதிவும் செய்யப்படவில்லை.

20) மேற்காட்டிய உருப்படிகளில் எவ்வுருப்படிகள் பங்காளர்களிடையே மேற்கொள்ளப்படுகின்ற இலாப நட்டம் பகிர்வாகக் கருதப்படும்.
(1) A,B ஆகும் (2) A,C ஆகும். (3) A,B,C ஆகும்.
(4) A,B,C,D ஆகும் (5) A,B,C,D,E ஆகும். (……)

21) 2017.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் சரியான இலாபமாக அமைவது,
(1) ரூபா 90,000ஆகும். (2) ரூபா 102, 000ஆகும். (3) ரூபா 106,000ஆகும்.
(4) ரூபா 114,000 ஆகும் (5) ரூபா 116, 000ஆகும். (……)

22) மேற்காட்டிய சகல தகவல்களையும் கவனத்திற்கு கொண்ட பின்னர் 2017.03.31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் பங்குடமை வணிகத்தின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையாக இருப்பது,
(1) ரூபா 94,000 (2) ரூபா 97,000 (3) ரூபா 100.000
(4) ரூபா 104.000 (5) ரூா 116.000 (……)

23) L K A S 37 (ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இற்கு அமைய ஏற்பாடு ஒன்றை இனங்காண்பதில் திருப்திப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனை / நிபந்தனைகள் எது / எவை?

A - கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக எழும் சட்டரீதியான அல்லது உறுதியான கட்டுப்பாடு ஒன்றினை நிறுவனமானது நிகழ்காலத்தில் கொண்டிருத்தல்.

B - கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு காணப்படும் வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியத்தன்மை காணப்படல்.

C - கடப்பாட்டிற்கான தொகை தொடர்பில் நம்பத்தகுந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளமுடிதல்.

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A,B மாத்திரம்
(4) B,C மாத்திரம் (5) A,B,C ஆகிய எல்லாம் (……)

❖ **கீழுள்ள தரவுகள் அடிப்படையில் 24,25,26ம் வினாக்களுக்கு விடை தருக.**

*01.04.2015இல் ஒவ்வொன்றுக்கும் 20 ரூபாய் விலையில் ரூ50,000 சாதாரண பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மதுராகம்பனியின் இரண்டு ஆண்டுகளுக்கான தகவல்கள் வருமாறு,*

| | 31.03.2017 | 01.04.2016 |
|---|---|---|
| **சாதாரணபங்கு மூலதனம்** | 1200 | 1000 |
| **பொது ஒதுக்கம்** | 300 | 200 |
| **மீள்மதிப்பீட்டு** ஒதுக்கம் | 200 | ---- |
| **நிறுத்திவைத்த** வருவாய் | 2000 | 1500 |

*31.03.2017இல் முடிவடைந்த நிதியாண்டில் ஒவ்வொன்றும் ரூ10 விலையில் 10 000 பங்குகளை நிறுத்தி வைத்த இலாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.*

24) 31.03.2017இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான இலாபம் யாது?
(1) ரூ 700000 (2) ரூ 900000 (3) ரூ 600000 (4) ரூ 500000 (5) ரூ 400000 (……)

25) 31.03.2017இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான மொத்த முற்றும் அடங்கிய வருமானம் யாது?
(1) ரூ 400000 (2) ரூ 900000 (3) ரூ 600000 (4) ரூ 700000 (5) ரூ 1000000 (……)

26) உரிமை மூலதனத்தில் 31.03.2017 இல் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?
(1) ரூ 1200,000 (2) ரூ 1500, 000 (3) ரூ 1000,000
(4) ரூ 1400,000 (5) ரூ 3700, 000 (……)

27) வரையறுக்கப்பட்ட சாருஜா பொதுக்கம்பனியின் 2017.03.31இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் தகவல்க் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. (ரூபா 000)

| வருமான வரி கொடுப்பனவு | வரவு | செலவு |
|---|---|---|
| 2016 / 2017 | 300 | |
| 2015 / 2016 | 285 | |
| வருமான வரிக்கான ஏற்பாடு | | |
| 2015 / 2016 | | 350 |

2015 / 2016ம் வருடத்திற்கான வருமான வரி ரூபா 325 000 என வருமான வரித்திணைக் களத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. 2017.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான வரி ரூபா 350 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தகவல்களின் உதவியுடன் நிதிக்கூற்றில் உள்ளடக்க வேண்டிய சரியான பெறுமதிகள் என்ன?

| | வருமானவரிச் செலவு (ரூபா) | வருமானவரிப்பொறுப்பு (ரூபா) |
|---|---|---|
| (1) | 325 000 | 50 000 |
| (2) | 325 000 | 65 000 |
| (3) | 325 000 | 90 000 |
| (4) | 350 000 | 65 000 |
| (5) | 350 000 | 90 000 |

(……)

❖ **வினா இலக்கம் 28, 29ற்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும். பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அனோமா கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களுள்** சில **வருமாறு.**

A - வணிகத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உடன்காசுக்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படல்.

B - மூன்று மாத கால முதிர்வினைக் கொண்ட ரூபா *50 000* திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படல்.

C - நிதிக்குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்துக்கான தவணைக்கட்டணம் செலுத்துதல்.

D - ஒவ்வொன்றுக்கும் ரூபா *100* பெறுமதி கொண்ட *5000* சாதாரண பங்குகளை தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு ஒதுக்கத்தினை பயன்படுத்தி வழங்குதல்.

*28)* மேற்கூறிய நடவடிக்கைகளில் எக்கொடுக்கல் வாங்கல் ஊடாக காசுப்பாச்சல் இடம் பெறுகின்றது.
*(1)* A,B மட்டும் *(2)* A,C மட்டும் *(3)* A,B,C மட்டும்
*(4)* B,D மட்டும் *(5)* BC,D மட்டும் *(……)*

*29)* மேற்காட்டிய எக் கொடுக்கல் வாங்கல் ஊடாக நிதிச்செயற்பாட்டுக்குரிய காசுப்பாச்சல் உருவாகின்றது.
*(1)* B மட்டும் *(2)* C மட்டும் *(3)* B,C மட்டும்
*(4)* B,D மட்டும் *(5)* C,D மட்டும் *(……)*

*30)* பின்வரும் எவ்விடயம் கம்பனியொன்றின் மொத்த உரிமை மாற்றம் தொடர்பில் பொருத்தமற்றதாகும்.
A – பங்காளர்களுக்கு பங்கிலாபம் செலுத்துதல்.
B – அட்டுறு கணக்காய்வினைப் பதிவு செய்தல்
C – ஒதுக்கத்தை மூலதனமாக்கல்
D – உரிமை வழங்கலை மேற்கொள்ளல்
E – சாதாரண பங்காளர்களுக்கு இறுதிப் பங்கிலாபத்தை முன்மொழிதல்.
*1)* Aயும் Bயும் மாத்திரம்
*2)* Aயும் Cயும் மாத்திரம்
*3)* Aயும் Eயும் மாத்திரம்
*4)* Bயும் Cயும் மாத்திரம்
*5)* Cயும் Eயும் மாத்திரம் *(……)*

*31)* கணக்கீட்டின் எண்ணக்கருக்களும் அதன் நோக்கங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் நோக்கங்களுக்கு பொருத்தமான எண்ணக்கருக்களை எழுதிக் காட்டுக.

| **நோக்கங்கள்** | **எண்ணக்கரு** |
|---|---|
| A. பொருளாதார நடவடிக்கைகளின் பொது அளவுகோல் பணமாகும். | …………………………………….. |
| B. சொத்து மற்றும் பொறுப்புக்கள் கையேற்கும் போது கையேற்கும் விலையில் கணக்குகளில் பதிதல் | …………………………………... |
| C. ரூபா *3000*க்கு குறைவாக கொள்வனவு விலையுடைய எல்லாச் சொத்துக்களும் செலவாக இனம் காணல். | ……………………………………… |
| D. சரக்கிருப்பு மதிப்பீடு செய்வதற்கு நிறையளித்த சராசரி விலையிடல் முறையினை தொடர்ச்சியாக பயன்படுத்தல். | ……………………………………… |

The National e-learning Portal for The General Education

32) 2017.01.01 ஆந்திகதி வணிகரொருவரான சோமபாலா என்பவர் ரூபா 6500 பெறுமதியான விற்பனை செய்த பண்டங்களை தனது வாடிக்கையாளரான சந்திரிக்காவிடம் இருந்து மீளப் பெற்றுக் கொண்டார். இத்தகவலைப் பயன்படுத்தி சோமபாலாவின் நாட்குறிப்பேட்டுக்குப் பொருத்தமான வகையில் இடைவெளிகளை நிரப்புக.

1) உரிய மூல ஆவணம் ………………………
2) முதன்மை ஏடு ………………………………
3) வரவுவைக்கும் கணக்கின் பெயர் ……………………….
4) செலவு வைக்கும் கணக்கின் பெயர் …………………….

33) நிறுவனம் ஒன்றில் இடம் பெறும் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் எந்த சூழல் காரணிகளுக்கு உரியது எனக்குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்கள் / நிகழ்வுகள்** | **சூழல்காரணிகள்** |
|---|---|
| A. வரவு செலவுத்திட்ட பிரேரணையின் கீழ் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான தொழில் தருநர் பங்களிப்பு 12% இருந்து 14% வரை உயர்த்தப்பட்டதால் மேலதிக செலவொன்றை வணிகம் ஏற்கவேண்டி இருத்தல். | …………………………………….. |
| B. தற்போது வணிகத்தில் பயன்படுத்தப் படும் கணக்கீட்டுக்கான கணிணி மென்பொருள் வைரஸ் (VIRUS) காரணமாக நீக்கப்பட்டு வேறு புதிய கணணி மென் பொருள் கொள்வனவு செய்யப்படல். | ……………………………………... |
| C. இஸ்லாமிய மக்களின் நோன்புக் காலத்தினை முன்னிட்டு மேலதிக பேரீந்துபழக் கொள்கலன்கள் இரண்டுக்கு ஈரானுக்கு கட்டளை அனுப்புதல். | ……………………………………… |
| D. கணக்கீட்டு செயன் முறையின் போது கணக்கீட்டு நியமங்களையும், கணக்கீட்டு தொழில் சார் நிறுவன ஆலோசனையும் பெறுதல். | ……………………………………… |

34) குணதிலக 01.01.2017 இல் முற்பணமாக ரூபா 300,000 ஐ முதலீடு செய்து வணிகம் ஒன்றினை ஆரம்பித்தார். இத் தொகையில் 80% ஐ பொருட்களை கொள்வனவு செய்ததுடன், விற்பனை விலையில் 20% இலாபம் பெறக்கூடியவாறு விற்பனை செய்துள்ளார். இவ்வியாபாரத்தின் தேறிய சொத்துக்கள் 31.01.2017 இல் ரூ 340000 ஆகும். இக்காலப்பகுதியில் எதுவித மேலதிக மூலதனமோ அல்லது பற்றுக்களோ மேற்கொள்ளப்படவில்லை. 31.01.2017இல் முடிவடைந்த காலத்திற்கான பின்வருவனவற்றை கணிப்பிடுக.

(அ) இலாபம் ………………
(ஆ) செயற்பாட்டுச் செலவுகள் ………………….

the National e-learning Portal for The General Education

35) வணிகமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல் காரணமாக சொத்து, பொறுப்பு, உரிமை என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தை "குறையும்", "அதிகரிக்கும்", "மாற்றமில்லை" என்றவாறு காட்டுக.

| கொடுக்கல் வாங்கல் / நிகழ்வு | சொத்து | பொறுப்பு | உரிமை |
|---|---|---|---|
| 1) உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் சென்மதி செலவு ஒன்றினை செலுத்துதல். | | | |
| 2) கடன்படுநரின் ஐயக் கடனுக்காக ஏற்பாடு செய்தல். | | | |
| 3) வங்கி மேலதிகப்பற்று காணப்படும் போது வங்கியில் காசு வைப்பிடல். | | | |
| 4) முற்பணமாக பெற்ற கட்டடவாடகை. | | | |

36) பின்வருவனவற்றுள் நிறுவனமொன்றின் பொது நோக்குடைய நிதிக் கூற்றுக்களின் கூறுகளாக கருதப்படுவனவற்றைக் குறிப்பிடுக.

**ஆம் / இல்லை**

A – மொத்த முற்றடக்க வருமானக்கூற்று ……………………………..
B – நிதி நிலைமைக் கூற்று ……………………………..
C – உரிமை மாற்றல் கூற்று ……………………………..
D - இயக்குனர் அறிக்கை ……………………………..

37) பொதுப்பேரேட்டில் காணப்படும் பின்வரும் கணக்குகளுக்கு பொருத்தமான வகைப்படுத்தலை குறிப்பிடுக.

**கணக்கு** **வகைப்படுத்தல்**

A – இயக்குநர் சம்பளம் ……………………………..
B – நிறுத்திவைத்த இலாபம் செலவு மீதி ……………………………..
C – நிலையான வைப்பு ……………………………..
D – கிடைத்த கழிவு ……………………………..

38) கம்பனியொன்று தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் குணாதிசையங்ளை குறிப்பிடுக.

A – ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த ஒரு வாரத்தினுள் இடைக்கால நிதிக் கூற்றுக்களை வழங்குதல் ……………………………………………

B – கம்பனியின் காணியானது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படுதல் …………………………………………………

C – சரக்கிருப்பு மதிப்பீட்டிலும், பெறுமான தேய்வு மதிப்பீட்டிலும் ஒரே மதிப்பீட்டு முறையை பயன்படுத்தி வருதல் ………………………………….

D – நிதிக்குத்தகையின் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றைச் சொத்தாக இனங்காணல். …………………………………………

39) பின்வரும் ஒவ்வொரு உருப்படியும் நிதிக் கூற்றிலுள்ள எந்த மூலத்தில் இனங்காணப் படுகிறது என்பதனை குறிப்பிடுக.

**உருப்படிகள்** **மூலம்**

A – மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ……………………………..
B – சென்மதி வட்டி ……………………………..
C – மோட்டார் விற்பனை நட்டம் ……………………………..
D – விற்பனை உத்தரவாத ஏற்பாடு ……………………………..

40) பின்வரும் தகவல்கள் விளையாட்டுக் கழகமொன்றின் சந்தாவுடன் தொடர்பானவை.

| விபரம் | 31.03.2017 | 31.03.2016 |
|---|---|---|
| முற்பணமாக பெற்ற சந்தா | 80 000 | 60 000 |
| நிலுவையாகவுள்ள சந்தா | 30 000 | 20, 000 |

அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ 1000 ஆகும்.

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் 60 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர்.
31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) வருமானமாக இனங்காணப்பட்ட சந்தா ரூ ……………………………….

(ஆ) காசாக பெறப்பட்ட சந்தா ரூ …………………………………………….

41) 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு விதிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – இலாபநட்டம் சமமாக பகிரப்படுதல் வேண்டும்.

B – மூலதனத்துக்கு வட்டி வழங்கப்படுவதில்லை

C – பங்காளர் ஒருவர் இளைப்பாறும் போது அல்லது இறக்கும் போது அவரது உரிமையை கடன்கணக்கிற்கு மாற்றினால் வருடாந்தம் 5% வட்டி வழங்கப்படல் வேண்டும்.

D – மூலதனத்திற்கு மேலதிகமாக பங்காளர் வழங்கியுள்ள கடன்களுக்கு 5% வட்டி பெற உரித்துடையவராவர்.

மேற்குறிப்பிட்ட தகவல்களின் அடிப்படையில் அட்டவணையைப் பூரணப்படுத்தவும்.

விதிமுறை / விதிமுறைகள்
(எழுத்தினை மாத்திரம் குறிப்பிடவும்)

1) பங்குடமை வணிகமொன்றின் இலாபத்தை பகிர்தல் ………………………………….

2) 24 ஆம் பிரிவு ………………………………….

3) 42 ஆம் பிரிவு ………………………………….

42) பின்வரும் கொடுக்கல் வாங்கல் ஊடாக வங்கி மீதியில் அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படுகின்றதா என்பதைக் குறிப்பிட்டு காட்டவும்.

| கொடுக்கல் வாங்கல் | வணிகத்தின் வங்கிக்கணக்கு மீதி |
|---|---|
| 1) கடன்படுநர் ஒருவரின் வங்கியில் நேரடி வைப்பு. | …………………………………. |
| 2) வங்கி காசோலைப் புத்தக கட்டணம் அறவிடல். | …………………………………. |
| 3) வணிகத்தில் மின்சாரக் கட்டணமானது காசோலை மூலம் செலுத்தப்படல். | …………………………………. |
| 4) வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலை மறுக்கப்படல். | …………………………………. |

43) பின்வரும் கூற்றுக்களில் எது சரி, எது பிழை என்பதனை பொருத்தமான நிரலில் "√" அடையாளமிடுவதன் மூலம் காட்டுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| A. கடன்வட்டி கொடுப்பனவினால் உரிமையாண்மை குறைவடைகிறது. | …………………………………. |
| B. வருடமொன்றில் இலாபம் ஈட்டப்படும் போது வருடமுடிவிலுள்ள காசு மீதி எப்போதும் அதிகரிக்கும். | …………………………………. |
| C. பங்குடமையொன்றின் நன்மதிப்பானது அதன் இலாபத்தன்மையில் மாற்றம் ஏற்படும் போது மதிப்பீடு செய்யப்படும். | …………………………………. |
| D. 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தின் பிரிவு 24 ஆரை பங்காளர்களின் மூலதன மீதிக்கு 5% வட்டி செலுத்த வேண்டும். | …………………………………. |

44) நலன்புரிச் சங்கமொன்றின் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017.03.31 | 2016.03.31 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 12000 | 10000 |
| காசும் வங்கியும் | 22000 | 20000 |
| காகிதாதி இருப்பு | 5000 | 3000 |
| பொறுப்புக்கள் | 3000 | 2000 |

(அ) 2017.03.31 இல் முடிவடையும் வருடத்துக்கான மேலதிகம் / பற்றாக்குறை

……………………………………………………………………………………..

(ஆ) 2017.03.31 இல் திரண்ட நிதி

……………………………………………………………………………………..

45) வரையறுத்த கபிலா கம்பனி 2016.01.01 அன்று குத்தகை அடிப்படையில் நியாயமான விலையில் ரூ 1200 000 வுக்கு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தது.

A - இயந்திரத்தின் பயன்பாட்டு ஆயுட்காலம் 5 வருடங்கள்.

B - குத்தகையின் ஆயுட்காலம் 4 வருடங்கள்.

C - முதல் வைப்புப்பணம் ரூபா 200 000 ஆகும்.

D - எஞ்சிய தொகையானது ரூபா 300 000 படி வருடாந்த 4 தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும். முதல் தவணைக்கட்டணத்தில் உள்ளடங்கியுள்ள வட்டி ரூபா 80 000 ஆகும். இரண்டாவது தவணைக்கட்டணத்தில் அது ரூபா 60 000 ஆகும்.

E - கபிலா கம்பனி வழமையாக 31.12 திகதி கணக்கேடுகளை மூடும் முதல் வைப்புத்தொகை மற்றும் முதலாவது தவணைக்கட்டணம் என்பவற்றைச் செலுத்தியுள்ளது.

1) கபிலா கம்பனி 01.01.2016 இல் நிதி நிலைமை கூற்றில் சொத்தாக இனங்காணப்படுகின்ற பெறுவது ……………………………………………..

2) வருடத்திற்கான பெறுமானத்தேய்வின் பெறுமதி யாது? ……………………………………

3) 31.12.2016 இல் நடைமுறையல்லாப் பொறுப்பாக காட்ட வேண்டிய பெறுமானம் யாது? ……………………………………………………

4) 31.12.2016 இல் நடைமுறைப் பொறுப்பாக காட்டவேண்டிய பெறுமானம் யாது?.........................

46) பின்வரும் தகவல்கள் பெறுமதி சேர் வரிக்காகப் பதியப்படாத வியாபாரம் ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பானவை.

மோட்டார் வாகனத்தின் கொள்விலை ரூ 750,000

சுங்கத்தீர்வை ரூ 100,000

நிறுவனத்தின் பெயர் பொறித்தமைக்கான செலவு ரூ 150,000

பதிவுக்கட்டணம் ரூ 60000

பெறுமதிசேர்வரி ரூ 96000

LKAS – 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி

ஆரம்ப இனங்காணலின் போது மோட்டார் வாகனத்தின் கிரயம் யாது?

……………………………………………………………………………………………

47) வித்தியா கம்பனி 40000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ 10 விலையில் வழங்கியது. 60000 பங்குகளுக்கு விண்ணப்பங்களை பெற்றுக் கொண்ட கம்பனி பங்குகளை விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்து மேலதிக விண்ணப்ப பணத்தை மீளச் செலுத்தியது.

பங்கு ஒதுக்கீடு தொடர்பான நாட்குறிப்பு பதிவினை தருக. (விளம்பல் தேவையில்லை)

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

48) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் நிதியாண்டு 2017.03.31ம் திகதியுடன் முடிவடைவதுடன் நிதிக் கூற்றுக்கள் அனுமதிக்கப்பட்ட திகதி 2017.05.30 ஆகும். அவ்விரு திகதிகளுக்குமிடையில் இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகளை "சீராக்கும் நிகழ்வுகள்" "சீராக்காத நிகழ்வுகள்" என "√" அடையாளமிட்டு வகைப்படுத்திக்காட்டுக.

| | சீராக்கும் நிகழ்வுகள் | சீராக்காத நிகழ்வுகள் |
|---|---|---|
| 1) சாதாரண பங்குகளுக்கு பங்குலாபத்தை பிரேரித்தல் | ………… | ………… |
| 2) இழப்பீடு ஒதுக்கப்பட்டுள்ள வழக்கு ஒன்றின் தீர்ப்பு கிடைத்தல். | …………. | ………… |
| 3) முதலீடுகளின் விலை சந்தையில் வீழ்ச்சி | ………… | ………… |
| 4) நிதியாண்டு இறுதி திகதியில் கடன்படுநர் ஒருவர் முறிவடைதல் | …………. | ………… |

49) பின்வரும் வழுக்களினால் வணிக மொன்றின் பரீட்சை மீதியில் மாற்றம் "ஏற்படும்" "ஏற்படாது" என்பதனைக் குறிப்பிடுக.

1) ரூபா 25000 கொள்வனவுப்பட்டியல் ஏடுகளில் விடுபடல் ……………………………………………...

2) ரூபா 12500 வங்கிமேலதிகப்பற்று சாதக மீதியாக பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படுதல்.

………………………………………………………………………………………………………

3) கொடுத்த கழிவு ரூபா 4000 பெற்ற கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்படல்.

………………………………………………………………………………………………………

4) அறவிட முடியாக்கடன் பதிவளிப்பு ரூபா 35000 கட்டுப்பாட்டுக்கணக்கில் பதிவு செய்யப்பட்ட போதிலும், உரிய கடன்பட்டோர் கணக்கில் பதிவு செய்யப்படாதிருத்தல்

………………………………………………………………………………………………………

50) வரையறுத்த பொதுக்கம்பனியொன்று பொதுமக்களுக்கு மேற்கொள்ளும் பங்கு வழங்களிற்கு மேலதிகமான பங்கு வழங்களை குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017**

FWC

**Term Examination, November - 2017**

| தரம் :- 13 (2018) | கணக்கீடு – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்

*(1)* வரையறுக்கப்பட்ட அனித்தா பொதுக் கம்பனியின் 31.03.2017 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு ரூ000 | செலவு ரூ000 |
|---|---|---|
| கொள்வனவு, விற்பனை | 2760 | 4600 |
| 01.04.2016 இல் சரக்கிருப்பு | 300 | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (பங்கொன்று ரூ 10) | | 4000 |
| வியாபார வருமதியாளரும், சென்மதியாளரும் | 164 | 127 |
| ஐயக்கடன் ஏற்பாடு (01.04.2016ல்) | | 5 |
| சம்பளங்கள் | 100 | |
| ஊழியர் சேமலாப நிதிச்செலவு | 9 | |
| ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவு | 3 | |
| ஊழியர் சேமலாப நிதிச் சென்மதி | | 2 |
| பெறுமதி சேர் வரி செலுத்தியது | 250 | |
| 01.04.2016 இல் சென்மதி பெறுமதி சேர்வரி | | 60 |
| 01.04.2016 ல் நிறுத்தி வைத்த இலாபம் | | 100 |
| ஆதனம் பொறி உபகரணம் 01.04.2016 ல் | 5000 | |
| ஆதனம் பொறி உபகரண தேய்வு ஏற்பாடு 01.04.2016ல் | | 700 |
| செலுத்திய வருமானவரி | 200 | |
| செலுத்திய பங்குலாபம் | 100 | |
| குத்தகை கடன்கொடுநர் | | 306 |
| பிறநிர்வாக செலவுகள் | 560 | |
| பிறவிற்பனை செலவுகள் | 128 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 326 | |
| | 9900 | 9900 |

**பிறதகவல்கள் :-**

(1) 31.03.2017 இல் சரக்கிருப்புகளின் கிரயம் ரூ.500 000 ஆகவும், அவற்றின் தேறிய நிகரப் பெறுமானம் ரூ 620 000 ஆகவும் உள்ளது.

(2) ரூபா 4000 ஐ அறவிடமுடியாக் கடனாக பதிவளிப்பதுடன், எஞ்சிய வியாபார வருமதிகளின் பொருட்டு ஐயக்கடனுக்கான ஏற்பாட்டினை 5% க்கு சீராக்குக.

(3) விற்பனைகளும், கொள்வனவுகளும் 15 சதவீதம் பெறுமதிசேர் வரியினை உள்ளடக்கியுள்ளது.

(4) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நிறுவனம், ஊழியர் முறையே 12%, 8% பங்களிப்பு செய்வதுடன், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 4% பங்களிப்பும் செய்கின்றனர்.
கணக்காண்டின் ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான முதல் மூன்று காலாண்டுக்கான தொகைகள் காசாக செலுத்தப்பட்டுள்ளதுடன், இறுதிக் காலாண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான ஊழியர் பங்களிப்புக்கு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

(5) அ) ஆதனம், பொறி, உபகரணங்கள் பின்வரும் சொத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

| சொத்துக்கள் | கிரயம் / நியாயமான பெறுமதி | தேய்மான ஏற்பாடு |
|---|---|---|
| கட்டிடம் (நியாயமான பெறுமதி) | 3000 | 300 |
| இயந்திரங்கள் (கிரயம்) | 800 | 200 |
| மோட்டார்வான் (கிரயம்) | 1200 | 200 |
| | 5000 | 700 |

ஆ) எல்லாச் சொத்துக்களும் நேர் கோட்டு முறையில் தேய்விடப்படுகின்றது.

இ) 31.03.2017 இல் கட்டிடங்கள் இரண்டாம் தடவையாக ரூபா 3200000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2013 இல் முதல் தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பொழுது ரூபா 100, 000 மீள் மதிப்பீட்டு குறை ஏற்பட்டு இருந்தது.

ஈ) இயந்திரங்கள் நிதிக்குத்தகை அடிப்படையிலும், மோட்டார் வான்கள் காசுக்கும் 01.04.2014 இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

உ) நிகழாண்டுக்கான குத்தகை தவணைக் கட்டணம் ரூபா 160 000 காசாக செலுத்தப்பட்டு பிற நிர்வாக செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஊ) ஆண்டு 2016 / 2017, 2017 / 2018 இற்கான வட்டி முறையே ரூ 9000, ரூ 5000 ஆகும்.

(6) 01.04.2016 இல் இருந்து கம்பனி தனது பொருட்களை ஒரு வருட கால விற்பனை உத்தரவாதத்துடன் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் இவ்வாண்டுக்கான உத்தரவாதத் தொகை விற்பனை விலையில் 1% என நம்பகரமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) ஆண்டு 2016 / 2017 இதற்கான வருமானவரி தேறிய இலாபத்தில் 1/3 பங்கு என நம்பகரமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(8) கம்பனி ஏற்கனவேயுள்ள பங்குதாரருக்கு அவர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு 20 பங்கிற்கும் ஒரு பங்கு எனும் அடிப்படையில் பங்கொன்று ரூபா 10 விலையில் வழங்கி நிறுத்தி வைத்த லாபத்தில் ஒரு பகுதியினை முதலாக்க தீர்மானித்தனர்.

**வேண்டப்படுவது :-**

*1)* *31.03.2017* இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்கிய வருமானங்களை உள்ளடக்கிய வருமானக்கூற்று

*2)* *31.03.2017* இல் முடிவுற்று வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

*3)* *31.03.2017* இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று *(20 புள்ளிகள்)*

*(2)* அ) சாந்தனும், யசோவும் இலாப நட்டங்களை *3 : 2* எனும் விகிதத்தில் பகிரும் பங்காளர்கள் ஆவர். *31.03.2016*ல் இவர்களின் நிதி நிலைமைக் கூற்று பின்வருமாறு.

| விபரம் | ரூ 000 | ரூ 000 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் (கிரயம்) | | 1000 |
| திரண்ட பெறுமான தேய்வு ஏற்பாடு | | (200) |
| | | 800 |
| சரக்கிருப்பு | 40 | |
| வியாபார வருமதிகள் (10% ஐயக்கடன் ஏற்பாடு கழித்து) | 45 | |
| முற்பண காப்புறுதி | 5 | |
| வங்கி மீதி | 80 | 170 |
| | | 970 |
| மூலதனக்கணக்கு - சாந்தன் | 490 | |
| யசோ | 300 | 790 |
| நடைமுறைக்கணக்கு சாந்தன் | 46 | |
| யசோ | 34 | 80 |
| 10% யசோ கடன் | | 60 |
| வியாபார கடன்கொடுநர் | 36 | |
| சென்மதி மின்சாரம் | 4 | 40 |
| | | 970 |

The National e-learning Portal for The General Education

**பிறதகவல்கள் :-**

*(1)* *01.04.2016* இல் குகன் இலாபத்தில் 1/5 பங்கு உரித்துடன் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். எஞ்சிய பங்கினை ஏனைய பங்காளர்கள் சமனாக பகிர்ந்தனர். புதிய பங்குடமை அமைப்பில் மூலதனத்துக்கு 10% வட்டி கணிப்பிடவும், ஒவ்வொரு பங்காளர்களும் வருடமொன்றிற்கு ரூ *60000* சம்பளம் வழங்கவும் இணங்கினர்.

(2) குகன் ரூ 210, 000 இனை மூலதனப் பங்களிப்பாக செலுத்தினார். குகன் சேரலின் பொருட்டு பங்குடமையின் மொத்த நன்மதிப்பு ரூ 50 000 என மதிப்பிடப்பட்டது. இது தொடர்பாக நன்மதிப்புக்கு கணக்கு எதுவும் பேணாது தொடர்பான சீராக்கங்கள் மூலதனக்கணக்கு ஊடாக மேற்கொள்ளப்படும்.

(3) 31.03.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்காலத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல் வருமாறு

அ) கொள்வனவுகள், விற்பனைகள் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், பெறுவனவுகள் கொடுப்பனவுகள் யாவும் வங்கிக்கணக்கினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

ஆ) 31.03.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| | |
|---|---|
| **பெறுவனவுகள்** | **ரூ 000** |
| குகன் மூலதனமாக கொண்டுவந்த காசு | 210 |
| வாடிக்கையாளரிடம் பெற்ற காசு | 2090 |
| **கொடுப்பனவுகள்** | |
| வழங்குநருக்கு செலுத்திய காசு | 1516 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 194 |
| சாந்தன் மூலதன வட்டி | 20 |
| யசோ சம்பளம் | 40 |
| யசோ கடன் வட்டி | 4 |
| குகனின் சொந்த ஆயுள் காப்புறுதிக் கட்டணம் | 10 |

(4) ஆதனம் பொறி உபகரணங்களுக்கு ஆண்டொன்றுக்கு 10% தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்படும்.

(5) ஐயக்கடன் ஏற்பாடு ஆண்டு இறுதிக் கடன்படுநரில் நிலையான சதவீதமொன்றினால் பேணப்படுகின்றது.

(6) நிறுவனத்தின் மொத்த இலாபவிகிதம் கிரயத்தில் 40% ஆகும்.

(7) ஆண்டுக்கான விற்பனைகள், கொள்வனவுகள் முறையே ரூ 2100 000, 1510 000 ஆகும்.

(8) 31.03.2017 இல் - முற்பணக் காப்புறுதி ரூ 6000
- அட்டுறு மின்சாரம் ரூ 8000

வேண்டப்படுவது :-

1) 31.03.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

2) 31.03.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பங்காளர் மூலதனக் கணக்கு, நடைமுறைக்கணக்கு.

(10 புள்ளிகள்)

**02)** ஆ) 1. பின்வரும் விடயங்கள் இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாகம் தொடர்பானது.

→ ஒப்பீட்டுத் தன்மை
→ உண்மையான பிரதிநிதித்துவம்
→ மெய்மையாக்கும் தன்மை
→ காலந்தவறாமை
→ விளங்கிக் கொள்ளும் தன்மை
→ பொருத்தப்பாடு
→ தொடர்ந்து இயங்கும் தன்மை
→ நிதிக்கூற்றின் நோக்கம்
→ நிதிக்கூற்றின் தரரீதியான பண்புகள்
→ நிதிக்கூற்றின் மூலங்கள்
→ நிதிக்கூற்றின் மூலங்களுக்கான வரைவிலக்கணங்கமும், இணங்காணலும்
→ நிதிக்கூற்றின் மூலங்களை அளத்தல்
→ வரலாற்றுக் கிரயம்
→ நடைமுறைக் கிரயம்
→ நிகர தேறத்தக்க பெறுமதி
→ இற்றைப் பெறுமதி

மேலே தரபட்ட தகவல்களின் அடிப்படையில் கீழ்வரும் வினாக்களுக்கு (உங்கள் விடைத்தாளில்) விடையளிக்குக.

1) நிதிக்கூற்றுக்களை தயாரித்து வெளியிடுவதற்காக பின்பற்றப்படும் அடிப்படை எடுகோள்.
.......................................................................................................

2) கணக்கீட்டு வேலைச் சட்டகத்தினால் வரையறுக்கப்படும் விடயங்கள் எவை?
A -........................................
B -........................................
C -........................................
D -........................................
E -........................................

3) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி நிதித்தகவல்களின் அடிப்படை பண்புசார் குணாதிசயங்களாக கருதப்படுபவை.
A -........................................................................................
B -........................................................................................

4) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்ட வாக்கத்தின் படி நிதித்தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்கள் எவை?
A -........................................
B -........................................
C -........................................
D -........................................

5) நிதிக்கூற்றுக்களின் மூலங்களை அளவிடுவதற்கு செய்வதற்கு பயன்படுத்தப்படும் அளவீட்டு அடிப்படைகள் எவை?
A -........................................
B -........................................
C -........................................
D -........................................

6) பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கையில் வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தாக்கத்துக்கு உட்படும் பிரதான கணக்கீட்டுத்தகவலின் பண்புசார் இயல்பு ஒன்றினைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

06 புள்ளிகள்

2. பின்வரும் தலைப்புக்களுக்கு பொருத்தமான இலங்கை கணக்கீட்டு நியமங்களை குறிப்பிடுக?

A -நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தல்

B - இருப்புக்கள்

C - காசுப் பாச்சல் கூற்று

D - கணக்கீட்டுக் கொள்கை, மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்

E - அறிக்கையிடும் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்

F - ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

G -குத்தகை ஆதனம்

H -ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள், நிகழத்தக்க சொத்துக்கள்

04 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

**03)** அ) கலைமகள் வாணிபத்தில் 2017 ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் வருமாறு.

1) ரூபா 1000 000 பெறுமானமுடைய இயந்திரமும், மோட்டார் வானும் வங்கிக்கடன் மூலம் வாங்கப்பட்டது.
2) ரூபா 250,000 பெறுமானமுடைய மீன் விற்பனைப் பண்டங்கள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.
3) ரூ 600,000 உடமையாளரால் மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.
4) ஜனவரி மாத செயற்பாட்டுச் செலவுகள் ரூ 400,000 செலுத்தப்பட்டது.
5) ரூ 1000,000 கிரயமான பண்டங்கள் ரூ 1800,000 கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன.
6) கடன்படுநர்பேரேடு, கடன் கொடுநர் பேரேடுகளுக்கு இடையிலான எதிரீடு ரூபா 500 000
7) ஜனவரி மாதத்துக்கான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூ 50,000
8) வியாபார வருமதியாளர்களிடம் இருந்து ரூபா 150,000 அறவிட முடியாகக்கடனாக பதியப்பட்டது.
9) ரூபா 30 000 வங்கிக்கடன் வட்டி உட்பட ரூ 180,000 வங்கிகடன் தவணைப்பணம் மீள செலுத்தப்பட்டது.
10) ரூ 200,000 கிரயமானதும், ரூ 250,000 பட்டியல் விலையிடப்பட்டதுமான பண்டங்கள் கடன்படுநரால் திருப்பி அனுப்பப்பட்டன.

❖ கலைமகள் வாணிபமானது மூலதனக்கணக்கினை தனியொரு பேரேட்டுக் கணக்காகவும் (நிலையான மூலதனம்), நிறுத்திவைத்த வருவாய் கணக்கினை தனியொரு கணக்காகவும் பராமரித்து வருகின்றது,

தேவைப்படுவது.

1) மேலே 1 தொடக்கம் 10 வரையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும், நிகழ்வுகளையும் அதன் பெறுமானங்களுடன் கீழே தரப்படுகின்ற கணக்கீட்டு சமன்பாட்டு மாதிரியில் பதிவு செய்க.

(000 ல்)

| மீதிகளும் கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் = | | | | பொறுப்புக்கள் + | | உரிமையாண்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | காசும் காசுக்கு சமமானவையும் | வங்கிக் கடன் | வியாபார கொடுக்கு மதிகள் | மூலதனம் | நிறுத்தி வைத்த வருவாய் |
| 01.01.2017 இல மீதிகள் | 2000 | 1300 | 500 | 200 | 1000 | 800 | 1000 | 1200 |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |

2) 31.01.2017ல் முடிவடையும் ஜனவரி மாத வருமானக் கூற்று.

3) 31.01.2017ல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று.

(15 புள்ளிகள்)

**04)** அ) பல்வைத்தியரான சந்திரிக்கா என்பவர் 01.01.2017 இல் பற்சிகிச்சை நிலையம் ஒன்றினை ஆரம்பித்தார். பல் வைத்தியத்துடன் தொடர்பான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் இச் சிகிச்சை நிலையத்தினால் திறக்கப்பட்ட வங்கிக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

1) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2017 ஜனவரி மாதகாலத்தில் ஏற்பட்டுள்ளன.

அ) ரூ 250 000 மூலதனமாக முதலீடு செய்யப்பட்டதுடன் ரூ 600 000 வங்கிக்கடனாகவும் பெறப்பட்டது.

ஆ) ரூபா 800, 000 பெறுமதியான பல் உபகரணமொன்று காசோலை மூலம் கொள்வனவு செய்யப்பட்டது.

இ) பல்வைத்திய சேவையில் இருந்து ரூபா 60,000 உழைக்கப்பட்டது. இத் தொகையில் ரூபா 35000 காசாகப் பெறப்பட்டதுடன், மகுதித் தொகையானது பல்வைத்தியக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நோயாளர்களுக்கு செய்த சேவைக்காக காப்புறுதிக் கம்பனியிடம் இருந்து பெறப்படல் வேண்டும்.

ஈ) ரூ 16000 இற்கு பல் வைத்தியப் பொருட்கள் கொள்கனவு செய்யப்பட்டதுடன் மாத முடிவில் ரூபா 4000 பெறுமதியான பல்வைத்தியப் பொருட்கள் இருப்பாக காணப்பட்டன.

உ) பல்வைத்திய உதவியாளனுக்கு மாதச் சம்பளமாக ரூபா 10,000 செலுத்தப்பட்டது.

2) 31.01.2017 இல் பற்சிகிச்சை நிலையத்தின் வங்கிக்கூற்று மீதியானது இத்திகதியில் உள்ள காசுப்புத்தக மீதி ரூபா 59,000 உடன் இணங்கவில்லை. இதனைத் தொடர்ந்து பின்வருவன தெரிய வந்தன.

அ) பல்வைத்திய பொருள் வழங்குநர்களுக்காக கொடுத்த ரூ 16000 இற்கான காசோலை வங்கியில் சமர்பிக்கப்படவில்லை.

ஆ) காப்புறுதிக் கம்பனியால் நேரடியாக வங்கியில் வைப்புச்செய்யப்பட்ட பல்வைத்திய காப்புறுதிக் கொடுப்பனவுகள் ரூ 25000 காசுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை.

இ) நிலையான கட்டளையின் பேரில் செலுத்திய மாதாந்தகடன் வட்டி ரூபா 5000 காசுப்புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

ஈ) வங்கிக்கட்டணம் ரூ 1000 காசுப்புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

வேண்டப்படுவது.

1) மேலே (1) இல் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான நாட்குறிப்புப்பதிவுகள் (காசு உட்பட)

2) 31.01.2017 இல் உள்ளவாறான காசுப்புத்தகத்தின் சீராக்கிய மீதி

3) 31.01.2017ல் உள்ளவாறான வங்கிக் கூற்றில் காணப்படும் மீதி.

(10 புள்ளிகள்)

ஆ) வணிகமொன்றின் இயந்திரங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1) 2013.04.01 இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் பெறுமதி ரூபா 90 000 ஆக இருந்ததுடன் 10 வருடங்களின் பின் அதன் இழிவுப் பெறுமதி 10 000 ஆகவும் மதிப்பிடப்பட்டு இருந்தது.

2) 2015.10.01 இல்மேற்குறிப்பிட்ட இயந்திரத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ரூபா 40 000 பெறுமதியான புதியப்பகுதியொன்று அதற்கு பொருத்தப்பட்டது. அப்பொருத்துதல் காரணமாக பயன்படு ஆயுட்காலம் அத்திகதியில் இருந்து எதிர்வரும் 10 வருடங்களாகும் எனவும் மதிப்பிடப்பட்டது.

3) 01.01.2017 இல் மேற்குறிப்பிட்ட இயந்திரம் 120,000 பெறுமதியுடைய அதே போன்ற இயந்திரமொன்றுடன் மாற்றிக் கொள்ளப்பட்டது. இதற்காக பழைய இயந்திரத்துடன் மேலதிகமாக ரூபா 20, 000 செலுத்த வேண்டி ஏற்பட்டது.

4) புதிய இயந்திரத்தின் பயன்படு ஆயுட்காலம் 10 வருடங்கள் ஆகவும், இழிவுப் பெறுமதி அதற்கு இல்லை எனவும் மதிப்பிடப்பட்டது.

வேண்டப்படுவது.

1) இயந்திரப்பரிமாற்றம் தொடர்பிலான நாட்குறிப்பு பதிவுகள்

(5 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 15)

05) 01. 04. 2017 இல் மனோகரன் என்பவர் தனது சொந்த சேமிப்பில் இருந்து ரூபா 800,000ஐ ஈடுபடுத்தி உற்பத்தி, சில்லறை வாணிபம் ஒன்றினை ஆரம்பித்தார். அவரது ஏப்ரல் மாத செற்பாட்டின் போது பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

அ) காசுப் பெறுவனவு நாளேட்டில் இருந்து எடுக்கப்படட தகவல்கள் (000ல்)

| | | |
|---|---|---|
| 08.04.2017 விற்பனைகள் - காசு | 6300 | |
| 10.04.2017 சுமதியிடம் பெற்றது | 10000 | |
| (1500 காசு கழிவு கழித்தபின்) | | |
| 15.04.2017 விமலாவிடம் பெற்றது | 6700 | |
| 20.04.2017 வாடகை வருமானம் பெற்றது. | 3000 | (000ல்) |

ஆ) காசுக் கொடுப்பனவு நாளேட்டில் இருந்து பெறப்பட்ட தகவல்கள்

| | |
|---|---|
| 03.04.2017 மூலப்பொருள் கொள்வனவு – காசு | 2200 |
| 06.04.2017 - மூலப்பொருள் வழங்குரான இந்திரனுக்கு கொடுத்தது (400 கழிவு கழித்தபின்) | 4800 |
| 11.04.2017 இயந்திர இயக்குநர் கூலி - நேர் | 800 |
| 16.04.2017 உற்பத்தி மேற்பார்வையாளர் சம்பளம் | 1700 |
| 20.04.2017 அலுவலக நிர்வாக செலவுகள் | 1500 |
| 25.04.2017 விநியோக செலவுகள் | 300 |

இ) விற்பனை நாட்குறிப்பேட்டில் இருந்து பெற்றவை. (000ல்)

| | |
|---|---|
| 02.04.2017 சுமதிக்கு விற்பனை | 15000 |
| 08.04.2017 விமலாவுக்கு விற்பனை | 14000 |

ஈ) கொள்வனவு நாட்குறிப்பேட்டில் இருந்து பெற்றவை.(000ல்)

| | |
|---|---|
| 03.04.2017 இந்திரனிடம் கொள்வனவு - மூலப்பொருள் | 12000 |
| 10.04.2017 சாந்தியிடம் கொள்வனவு - மூலப்பொருள் | 8000 |

உ) பொது நாட்குறிப்பேட்டில் இருந்து பெறப்பட்டவை (000ல்)

அ) மாதமுடிவில் காணப்பட்ட மூலப்பொருள் இருப்பு 1300

நடைமுறை வேலை இருப்பு (உற்பத்திக்கிரயத்தில்) 200

முடிவுப்பொருள் இருப்பு 4500

ஆ) உற்பத்தி செயற்பாடுகளுக்காக மோகன் இயந்திரக் கம்பனியில் கடனுக்கு வாங்கிய இயந்திரத்தின் கிரயம் 5200 இவற்றின் எஞ்சிய பெறுமானம் 400ஆகவும், இதனது பயன்பாடு ஆயுற்காலம் 6 வருடங்கள் எனவும் மதிப்பிடப்பட்டது.

வேண்டப்படுவது.

1. காசுப்பெறுவனவு நாளேடு
2. காசுப்கொடுப்பனவு நாளேடு
3. மூலப்பொருள் கொள்வனவுக்கணக்கு
4. விற்பனைக் கணக்கு
5. 2017 ஏப்ரல் மாத உற்பத்திக்கணக்கு
6. 2017 ஏப்ரல் மாத தேறிய இலாபம்.

(மொத்தம் 15 புள்ளிகள்)

**06)** அ) தனி வியாபாரியான சரணியா என்பவர் 2016 ஜனவரி 01 ஆம் திகதி ரூ 500,000 இனை வங்கிக் கணக்கில் இட்டு அலங்காரப் பொருட்கள் விற்பனை வாணிபத்தினை ஆரம்பித்தார். அவர் முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை. 2016 டிசெம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டில் வங்கிக் கூற்றுக்களின் தொகுப்பு கீழ்வருமாறு.

| விபரம் | ரூபா | விபரம் | ரூபா |
|---|---|---|---|
| 2016 ஜனவரி 01 இல் மீதி | 500,000 | உபகரணச் செலவு | 650,000 |
| வாடிக்கையாளர் பெறுவனவு | 1660,000 | வழங்குகள் கொடுப்பனவு | 1140,000 |
| காசு விற்பனை | 440,000 | காசுக் கொள்வனவு | 120,000 |
| | | செலுத்திய சம்பளம் | 115,000 |
| | | செலுத்திய வாடகை | 55,000 |
| | | காசு எடுப்பனவு | 72,000 |
| | | ஏனைய செயற்பாடுகள் | 180,000 |
| | | 2016 டிசெம்பர் 31இல் மீதி | 268,000 |
| | 26 00 000 | | 2600,000 |

மேலதிகத் தகவல்கள்

1. உபகரணம் 2016 ஜனவரி 01ம் திகதி கொள்வனவு செய்யப்பட்டது. வருடாந்தம் 20% நேர்கோட்டு முறையில் தேய்மான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
2. 2016 டிசம்பர் 31ம் திகதி வியாபார வருமதிகளின் மொத்த மீதி ரூ 480,000
3. சரணியா சகல விற்பனைகளிலும் 40% இலாப எல்லை (Margin) பெறுகின்றார்.
4. 2016 டிசம்பர் 31ந் திகதியில் மொத்த வியாபார சென்மதிகள் 640,000.
5. தனது தனிப்பட்ட தேவைக்காக சரணியா சில வியாபாரப் பொருட்களை எடுத்திருந்த போதிலும் அத்தொகை எவ்வளவென்று தெரியவில்லை.
6. 2016 டிசம்பர் 31ந் திகதியில் செலுத்த வேண்டியிருந்த அட்டுறுவாடகை ரூ 5000.
7. ஆண்டின் போது வழங்குநர்களால் அனுமதித்த மொத்தக் கழிவுகள் ரூ 110,000
8. இறுதித் தொக்குகளின் கிரயம் ரூபா 410,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

செய்ய வேண்டியது

1. ஆண்டின் போது சரணியாவால் எடுத்துக் கொண்ட பொருட்களின் பெறுமதியை கணிப்பிடும் கூற்று.
2. 2016 டிசம்பர் 31ம் திகதி முடிவுற்ற ஆண்டின் வருமான கூற்று.
3. 2016 டிசம்பர் 31ம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று.

(10 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தரவுகள் வரையறுத்த ஆத்மிகா கம்பனியின் ஏடுகளில் இருந்து 31.03.2017 இல் பெறப்பட்டது.

| ஆதனம் பொறி உபவணம் | கிரயம் 01.04.2016 | பெறுமான தேய்வு ஏற்பாடு (000ல்) 01.04.2016 | பெறுமான தேய்வு 31.03.2017ல் முடிவுள்ள வருடத்துக்கான (000ல்) |
|---|---|---|---|
| காணி | 3000 | ………. | ……….. |
| கட்டிடம் | 5000 | 1500 | 260 |
| மோட்டார்வான் | 3600 | 1700 | 800 |
| அலுவலக உபகரணம் | 500 | 240 | 160 |
| தளபாடம் | 320 | 140 | 60 |
| பொறி இயந்திரம் | 4200 | 2100 | 1100 |

மேலதிக தகவல்

1. கணக்காண்டில் காணி ரூபா 200,000 கூட்டி மீளமதிப்பீடு செய்யப்பட்டது.
2. நிகழாண்டில் புதிய கட்டிடம் ஒன்று 1640,000க்கு கொள்வனவு செய்யப்பட்டது.
3. 500,000 கிரயமான மோட்டார் வாகனம் ஆண்டுக் காலத்தில் ரூபா 620,000க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனைத் திகதியில் இதன் பெறுமான தேய்வு ஏற்பாடு ரூபா 340,000 ஆகும்.
4. ஆண்டு காலத்தில் பின்வரும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
   மோட்டார் வாகனம் 900,000
   அலுவலக உபகரணம் 120,000
   பொறி இயந்திரம் 2800,000

வேண்டப்பட்டுவது.

31.03.2017 இல் முடிவுற்ற வருடத்துக்கான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் அசைவுக்கூற்று

(05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

**07)** அ) பின்வரும் தகவல்கள் 2017.03.31இல் முடிவடைந்த வருடத்துக்கான “வெற்றி” விளையாட்டுச் கழகம் தொடர்பானது.

1. 31.03.2017இல் முடிவடைந்த வருடத்துக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 20,000 | சம்பளங்கள் | 168,000 |
| உறுப்புரிமை கட்டணம் | 65,000 | மின்சாரம் | 24,000 |
| உள்ளக அரங்கு வாடகை | 155,000 | விளையாட்டு சஞ்சிகைக்கான சாந்தா | 9000 |
| உணவக விற்பனை | 160,000 | உணவுப்பொருள் கொள்வனவு | 80,000 |
| | | உள்ளக அரங்கு பராமரிப்புசெலவு | 30,000 |
| | | மீ / செ | 89, 000 |
| | 400,000 | | 400,000 |
| மீ / வ | 89,000 | | |

2. அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தாக் கட்டணம் ரூ1000, இக்கழகம் 60 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

3. வருடாந்த சம்பளங்களின் உள்ளடக்கம்

| | |
|---|---|
| உள்ளக அரங்கு காப்பாளர் சம்பளம் | 72000 |
| உணவக மேற்பார்வையாளர் சம்பளம் | 60000 |
| அலுவலக உதவியாளர் சம்பளம் | 36000 |
| | 168,000 |

4. வருடத்துக்கான நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமானத் தேர்வு ரூபா 50,000 ஆகும். நடைமுறை அல்லாத சொத்தின் 20% ஐ உணவகத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.
5. மின்சாரச் செலவில் 20% உணவகத்திற்கு உரியது.
6. நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும்.

| | 31.03.2017 | 01.04.2016 |
|---|---|---|
| உணவக இருப்புக்கள் | 50,000 | 60,000 |
| சென்மதி மின்சார செலவுகள் | 3000 | 2000 |
| விளையாட்டு சஞ்சிகைக்கு செலுத்திய முற்பணச் சந்தா | 4000 | 3000 |
| நிலுவையாக உள்ள உறுப்பினர் சந்தா | 5000 | 5000 |
| முற்பணமாக பெற்ற சந்தா | ? | 10,000 |

வேண்டப்படுவது

31.03.2017 இல் முடிவற்ற வருடத்துக்கான

1) அ) உணவகத்திலிருந்தான இலாபம் அல்லது நட்டம்

ஆ) வருமான செலவீனக் கூற்று

2) 31.03.2017ல் உள்ளவாறான முற்பணமாக பெற்ற அங்கத்தவர் சந்தாப்பணம் (10 புள்ளிகள்)

ஆ) கீழே தரப்பட்ட தகவல்கள் 31.03.2017இல் முடிவுற்ற வருடத்துக்கான வரையறுத்த சுமோதா கம்பனியுடன் தொடர்புடைய காசுப்பாச்சலுடன் தொடர்பானது தரப்பட்ட அட்டவணையில் "√" அடையாளம் இடுவதன் மூலம் அட்டவணையை பூரணப்படுத்துக.

| | கொடுக்கல் / வாங்கல் | செயற்பாடு | | முதலீட்டு | | நிதியீட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | உட்பாச்சல் | வெளிப் பாச்சல் | உட்பாச்சல் | வெளிப் பாச்சல் | உட்பாச்சல் | வெளிப் பாச்சல் |
| 1 | வாடிக்கையாளரிடம் சேகரிப்பு | | | | | | |
| 2 | வழங்குநருக்குக் கொடுப்பனவு | | | | | | |
| 3 | வருமான வரி செலுத்துகை | | | | | | |
| 4 | பங்குலாபப் பெறுவனவு | | | | | | |
| 5 | சாதாரண பங்குவழங்கல் | | | | | | |
| 6 | பொறி விற்பனையால் பெற்ற காசு. | | | | | | |
| 7 | தளபாடக் கொள்வனவு | | | | | | |
| 8 | செயற்பாட்டுச் செலவுகள் | | | | | | |
| 9 | தொகுதிக்கடன் மீட்பு | | | | | | |
| 10 | குத்தகை ஆரம்ப வைப்புப் பணம் | | | | | | |

(05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education